1984 பிப்ரவரி 24] [பேரவைத் தலைவர்]

திருக்கிறார்கள். ஆகவே உங்கள் அனைவரின் இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் அந்தக் குடும்பத்தாருக்கு இந்த மாமன்றத்தின் மூலம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரங்கல்தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் அனைத்து உறுப்பினர்களும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பேரவை உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை ஒத்தி வைக்கப் பெறுவதற்குமுன் ஓர் அறிவிப்பு.

2. அறிவிப்பு.

நிதிநிலை அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202(1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196(1) ஆகியவற்றின் கீழ் 1984-85 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை, 3-3-1984 ஆம் தேதி, சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு சட்டமன்றப் பேரைவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவை விதி 25(1)ன் கீழ் பேரவை இன்று ஒத்தி வைக்கப்பெற்று மீண்டும் மார்ச் திங்கள் 3ம் தேதி, சனிக்கிழமை காலை 11.00 மணிக்குக் கூடலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த பேரவை உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் அலுவல்கள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 3-3-1984 காலை 11.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். பின்னர் பேரவை முற்பகல் 9.28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.